### சட்டப்பேரவையில் த.வெ.க. அரசை நோக்கி கேள்வி எழுப்புவதால்

# என்னை மிரட்டுவதற்காக சோதனை நடத்துகிறார்கள்! பழிவாங்கும் நடவடிக்கையை சட்டப்படி சந்திப்பேன்!

## முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

**திருச்சி, செப்.6–**

**முன்னாள் அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வீட்டில் த.வெ.க. அரசு நடத்திய சோதனைகள் குறித்து கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது:–**



டெண்டர் முறைகேடு தொடர்பாக சோதனை செய்ய வந்தார்கள். திருச்சி, சென்னையில் உள்ள என்னுடைய வீட்டிலும் என்னுடைய சகோதரர் வீட்டிலும் சோதனை செய்தார்கள் அவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

வழக்கமாக பயன்படுத்தும் ஒரு கோப்பையும், என்னுடைய சகோதரரின் வரவு செலவு கணக்கு தொடர்பான விவரங்களையும் எடுத்துக் கொண்டார்கள் .

8 மணி முதல் 3 மணி வரை சோதனை நடைபெற்றது ஒவ்வொன்றாக பார்த்துவிட்டு அது தொடர்பாக எழுதி கையெழுத்து வாங்கி உள்ளார்கள்.

நாங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினோம். அவர்கள் கூறுவது போல் டெண்டர் தொடர்பாக நான் யாரிடமும் பேசியது கிடையாது. வழக்கு தொடர்பாக அடுத்து என்ன கூறுகிறார்களோ அதை கேட்டு சட்டப்படி சந்திப்போம்.

லஞ்ச ஒழிப்புத்துறை ஏற்கனவே ஒரு வழக்கு என்மீது பதிவு செய்துள்ளார்கள். அந்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. அது குறித்து அவர்கள் என்னிடம் எதுவும் கேட்கவில்லை.

நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை நீதிமன்றத்திற்கு சென்று நாங்கள் நிரபராதி என்பதை நிரூபிப்போம்.

சட்டசபையில் அரசை நோக்கி நான் கேள்வி எழுப்புவதால் என்னை மிரட்டுவதற்காக கூட இது போன்ற சோதனையை அவர்கள் செய்யலாம்.

அரசை அடிக்கடி நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள் என செய்தியாளர்கள் என்னிடம் சொல்வது எனக்கு பெருமையாக உள்ளது. இந்த சோதனை பழிவாங்கும் நடவடிக்கை தான்.

சட்டசபையில் ஒன்றிய அரசு குறித்து அமைச்சர் வன்னியரசு பேசிய கருத்தை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறியது ஒன்றிய அரசும் மாநில அரசும் ஒற்றுமையாக இருப்பதை காட்டுகிறது. ஒன்றிய அரசிடம் எந்த கெட்ட பெயரும் ஆகி விடக்கூடாது என்பதற்காக தமிழக அரசு செயல்பட்டு வருகிறார்கள்.

ஏற்கனவே முதல்வராக இருந்தவர்கள் நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும் பொழுது இரண்டு முறை என் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை செய்தார்கள். தற்பொழுது மூன்றாவது முறை சோதனை நடைபெற்றுள்ளது. காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைவர் என்னிடம் பேசினார். சோதனைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க அறிவுறுத்தினார்.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு பேட்டியளித்தார்.

# மெட்ராஸ் ஸ்டேட் என்றிருந்ததை ‘தமிழ்நாடு’ என்று பெயர் மாற்றி வரலாற்று சாதனை படைத்தவர் பேரறிஞர் அண்ணா!

## சட்டமன்றத்தில் திமுக கொறடா எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, செப்.6–**

**சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் கொண்டு வந்த “வழக்காடு மொழியாக தமிழுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனும் ஒன்றிய அரசை வலியுறுத்தும்” தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழகக் கொறடா எ. வ.வேலு அவர்கள், “ நமது தமிழ் நாட்டுக்கு தமிழ்நாடு எனப் பெயர் சூட்டியது திராவிட முன்னேற்றக் கழகமும் பேரறிஞர் அண்ணா அவர்களும் தான்!” என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரால் கொண்டு வரப்பட்ட இந்தத் தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முழுமனதோடு நாங்கள் வரவேற்கிறோம். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால், ‘சென்னை ராஜஸ்தானி’ என்றுதான் இருந்தது. அப்பொழுது கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, பக்கத்தில்இருக்கிற முழு ஆந்திரா, ஒரிசா மாநிலத்தின் ஒரு சில பகுதிகள் ஆகியவைதான், அப்போது ‘சென்னைராஜஸ்தானி’ என்று இருந்தது. அதற்குப் பிறகு, மொழிவாரி மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையைஒன்றிய அரசாங்கத்தில் வைத்தபொழுது, கன்னடம் பேசுகிற பகுதிகளையெல்லாம் கர்நாடகா என்றும், மலையாளம் பேசுகிற பகுதிகளை கேரளா என்றும், ஒரியா பேசுகிற பகுதிகளை அங்கே சேர்த்துவிட்டு, தெலுங்கு பேசுகிற இடங்களை ஆந்திரா என்றும், தமிழ்நாட்டை தமிழ்நாடு என்றும் அப்போதுகூடவரவில்லை. அப்போது கூட என்னவென்றால், MADRAS STATE என்று ஆங்கிலத்தில் சொன்னார்கள். அதே நேரத்தில், மெட்ராஸ் மாநிலம் என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குப் பிறகுதான், பேரறிஞர் அண்ணாஅவர்கள் 1967ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, இதே மாமன்றத்தில் ‘நான் சட்டத்தை நிறைவேற்றிவிட்டு, தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு என்று மூன்று முறை சொல்வேன், நீங்கள் வாழ்க! வாழ்க! வாழ்க!’ என்று ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லி, இந்த மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணாஅவர்கள்தான் தமிழ்நாடு என்று பெயர் வைத்தார்கள். அதிலிருந்து, தமிழ்நாடு என்று பெயர்வைக்க வேண்டும் என்றுதான் ஒவ்வொரு தமிழருடைய எண்ணமும் இருக்கிறது. எனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தில், ‘தமிழ்நாடு’ என்று இணைத்தால்இன்னும் சிறப்பாக இருக்கும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து, இதுஒன்று.

இங்கே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகுஅமைச்சர் அவர்கள், இது வரலாறு என்று சொன்னார்கள். பொதுவாக, இந்த மாமன்றத்தில், நாம்தீர்மானங்களை நிறைவேற்றுகிறோம், சட்டங்களை நிறைவேற்றுகிறோம். ஆனால், சில சட்டங்கள்முழுமையடைந்தால் நாமே ஆணை பிறப்பிப்பதில்லை. இங்கிருந்து ஆளுநருக்கு அனுப்புகிறோம். ஆளுநரின் பரிந்துரையின்பேரில் குடியரசுத் தலைவருக்குப் போகிறது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடுவருகிறபோது, அது சட்டமாக மாறுகிறது. இது நீதிமன்றம் சம்பந்தப்பட்டதாக இருக்கிற காரணத்தினால், குடியரசுத் தலைவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குத்தான் அனுப்புகிறார்கள். அப்படித்தான்உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, சில நேரங்களில் அது தடையைப் பெற்றது.

அதனால், இப்போது நாம் தீர்மானமாக நிறைவேற்றினாலும்கூட, இதனைக் கோரிக்கையாகத்தான் வைக்க முடியும். ஆளுநர் மூலமாக அல்லது குடியரசுத் தலைவர்மூலமாக அல்லது உச்ச நீதிமன்றம் சென்றால்தான் இது முழுமையடையும். அப்படியென்றால், அவ்வாறுமுடிந்தால்தான் இது வரலாறாக இருக்கும். நாங்கள் இப்போது வரலாறு வேண்டாமென்று சொல்லவில்லை.இதை உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்தால், வரலாறு என்று சொல்லலாம். அதில் ஒன்றும்தவறு இல்லை. இப்பொழுது வரலாறாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. இது கோரிக்கைதான். அதனால், இதில் ‘தமிழ்நாடு’ என்பதை இணைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.


### திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஆவடி - பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதி நிர்வாக வாரியாக மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்ட கழகச்செயலாளர் - ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



கழகத் தலைவர் தளபதிமு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமை கழக பிரதிநிதிகள் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா Ex MLA, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம் மற்றும் கிளை மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டம் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

| நாள் | நேரம் | நிர்வாகங்கள் | செயலாளர்கள் |
|---|---|---|---|
| 09.09.2026 புதன்கிழமை | காலை 9 மணி | ஆவடிதெற்கு பகுதி | திரு.ராஜேந்திரன் |
| | காலை 11 மணி | ஆவடிகிழக்கு பகுதி | திரு.பேபிசேகர் |
| | மாலை 4 மணி | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | திரு.ப.சகமலேஷ் |
| | மாலை 6 மணி | திருமழிசை பேரூர் | திரு.தி.வே.முனுசாமி |
| 10.09.2026 வியாழக்கிழமை | காலை 9 மணி | ஆவடிமேற்கு பகுதி | திரு.பொன்விஜியன் |
| | காலை 11 மணி | ஆவடிவடக்கு பகுதி | திரு.நாராயண பிரசாத் |
| | மாலை 4 மணி | பூவிருந்தவல்லிநகரம் | திரு.G.R.திருமலை |
| | மாலை 6 மணி | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | திரு.தேசிங்கு |
| 11.09.2026 வெள்ளிக்கிழமை | காலை 9 மணி | திருவேற்காடுநகரம் | திரு.NEK மூர்த்தி |
| | காலை 11 மணி | திருநின்றவூர் நகரம் | திரு. தி.வைரவி |
| | மாலை 4 மணி | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | திரு.முரளி கிருஷ்ணன் |
| | மாலை 6 மணி | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | திரு.தங்கம் முரளி |
| 12.09.2026 சனிக்கிழமை | காலை 9 மணி | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | திரு.ஜெயசீலன் |
| | காலை 11 மணி | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | திரு.பிரேம் ஆனந்த் |

மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்,**

செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.


### சென்னை தெற்கு மாவட்ட கழக

# வட்டம் - பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள்!

## மாவட்ட கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

*சென்னை, செப். 6-*



*சென்னை தெற்கு மாவட்ட கழக வட்டம் மற்றும் பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள் குறித்து மாவட்ட கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு வருமாறு*

*சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக்கூட்டம் நேற்று (5-9-2026) சனிக்கிழமையன்று காலை 10 மணியளவில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் ஆஸ்டின் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையிலும் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலின்படி சட்டமன்றத் தொகுதிகளின் வாரியாக தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற உள்ளது. அவை வருமாறு:*

*மதுரவாயல் தொகுதி - 06.09.2026 ஞாயிறு, காலை 10 மணி - இடம்:எஸ்.பி.கிராண்ட் பேலஸ் - மவுண்ட் பூந்தமல்லி சாலை (போரூர் சரவணா ஸ்டோர் அருகில்)*

*சைதை தொகுதி - 06.09.2026 ஞாயிறு - மாலை 5.00 மணி -இடம்: வேலு மினி ஹால், சைதை தேரடி அருகில்*

*வேளச்சேரி தொகுதி - 07.09.2026 திங்கள் - மாலை 5.00 மணி, இடம்: கபாலி திருமண மண்டபம், காந்தி சாலை, வேளச்சேரி*

*விருகம்பாக்கம் தொகுதி - 08.09.2026 செவ்வாய் - மாலை 5 மணி - வடக்கு பகுதிக் கழக அலுவலகம் ஆர்க்காடு சாலை.*

*சோழிங்கநல்லூர் தொகுதி - 09.09.2026 புதன் - மாலை 5 மணி - எஸ்.பி.ஆர் திருமண மண்டபம் சோழிங்கநல்லூர்*

*மேற்கண்ட கலந்தாய்வுக் கூட்டங்களில், அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில அணிகளின் நிர்வாகிகள், பகுதிக்கழக நிர்வாகிகள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

### ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட வானாபுரம் வட்டத்தில்

# 30 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனை அமைக்கப்படுமா!

## சட்டப்பேரவையில் வசந்தம் க.கார்த்திகேயன் கேள்வி !

*சென்னை, செப். 7-*



*சட்டப்பேரவையில் ரிஷிவந்தியம் தொகுதி கழக உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் எழுப்பிய கேள்வி வருமாறு:*

**க. கார்த்திகேயன்:** *பேரவைத் தலைவர் அவர்களே, எனது ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட வானாபுரம் தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் தான் இருக்கிறது. ஆகவே, அங்கு 30 படுக்கைகள் கொண்ட ஒரு தாலுகா மருத்துவமனை அமைத்துக்கொடுத்தால், அந்தச் சுற்றுப்பகுதியிலுள்ள மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும். இதை உடனடியாக அமைச்சர் அவர்கள் செய்து தருவாரா என பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**டாக்டர் கோ.க. அருண் ராஜ்:** *பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு ரிஷிவந்தியம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட சட்டமன்ற உறுப்பினர் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அதை ஆய்வு மேற்கொண்டு, அங்கு எத்தனை புறநோயாளிகள் வருகிறார்கள். தேவைக்கேற்ப அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு வசந்தம் கார்த்திகேயன் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.*





திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் பேரவை பொதுச் செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சண்முகம் தலைமையில் நடைபெற்ற தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையின் செயற்குழு கூட்டத்தில் மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேரவை தலைவர் கி.நடராசன், பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன், பேரவை அலுவலக செயலாளர் ப.பன்னீர்செல்வம், பேரவை செயலாளர் என்.தனசேகரன், மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொருளாளர் கி.சீனிவாசன், தலைமை நிலைய செயலாளர் அ.தங்கராஜ், அமைப்பு செயலாளர் நா. செல்வகுமார், பிரச்சார செயலாளர் மு.ஜோதி , அரசு விரைவு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் பன்னீர் செல்வம், மாநகர் போக்குவரத்துக் கழக நிர்வாக பணியாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வி.மகேந்திரன், மற்றும் மாநகர போக்குவரத்து கழக ஊழியர் சங்கத்தின் தலைமைச் சங்க நிர்வாகிகள், பணிமனை செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சங்க முன்னோடிகள் என 300 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆசாத் நகரில் வெடி விபத்து ஏற்பட்டதில் 20க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்து பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இது பற்றிய தகவல் அறிந்ததும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார்.உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம்,வார்டு கவுன்சிலர் ராமகிருஷ்ணன்,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் ஆகியோர் உள்ளனர்.